# ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமி வித்யா மந்திர்
## தமிழ்

**ஏழாம் வகுப்பு** **வினா வங்கி**

## இயல் - 1
## இலக்கணம்

**நிரப்புக :**

1. தமிழ் எழுத்துகள் ______________ வகைப்படும்.
2. சார்பெழுத்து ______________ வகைப்படும்.
3. முப்பது எழுத்துகள் ______________ எனப்படும்.
4. குற்றியலுகர எழுத்துகள் ______________.
5. குறுமை + இயல் = உகரம் ______________.
6. குற்றியலுகரத்தின் வகைகள் ______________.
7. தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ______________.
8. 'காது' __________ தொடர்க் குற்றியலுகரம்.
9. ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் ______________.
10. வல்லின மெய் எழுத்துகள் ______________.
11. மெல்லின மெய் எழுத்துகள் ______________.
12. இடையின மெய் எழுத்துகள் ______________.
13. குறுமை + இயல் + இகரம் ______________.
14. குற்றியலுகரம் எடுத்துக்காட்டு ______________.
15. கொக்கு + யாது = கொக்கியாது ______________.
16. அஃது __________ தொடர்க் குற்றியலுகரம்.
17. மென் தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) ______________.
18. வன் தொடர்க் குற்றுயலுகரம் (எ.கா) ______________.
19. உயிர்த் தொடர்க் குற்றுயலுகரம் (எ.கா) ______________.
20. "மார்பு" __________ தொடர்க் குற்றியலுகரம்.

## இயல் - 2

1. குறுக்கங்கள் __________ வகைப்படும்.
2. தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ______________ எனப்படும்.

3. ஐகாரம் சொல்லின் முதலில் வரும் போது ___________ மாத்திரை அளவில் ஒலிக்கும்.
4. ஐகாரம் சொல்லின் _________ ________ வரும்.
5. ஔகாரம் சொல்லின் _______ _________ வராது.
6. தனக்குரிய அரைமாத்திரை அளவில் குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும் மகரம் __________ எனப்படும்.
7. தனக்குரிய அரைமாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பது _________ குறுக்கம்.
8. சொல்லின் முதலில் மட்டும் இடம் பெறுவது ________ குறுக்கம்.
9. ‘வேட்கை’ என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு _____________
10. முள் + தீது _______________ குறுக்கம்.
11. “வலம் வந்தான்” _________ குறுக்கம்.
12. மகரக் குறுக்கம் இடம் பெறாத சொல் ________.

## இயல் - 3

1. சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்கள் __________
2. இலக்கண வகையில் சொற்கள் _________ வகைப்படும்.
3. இலக்கிய வகையில் சொற்கள் _________ வகைப்படும்.
4. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ________
5. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி _______
6. இயற்சொல் __________ வகைப்படும்.
7. “மண்” என்பன _________ இயற்சொல்.
8. “நடந்தான்” என்பன ________ இயற்சொல்.
9. அவனை இவனால் _____________ இயற்சொல்.
10. மாநகர் __________ இயற்சொல்.
11. பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொல் __________
12. வடசொற்கள் ____________ வகைப்படும்.

## இயல் - 4

1. பவணந்தி முனிவர் தமிழில் ____________ ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிடுகிறார்.
2. ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவது ________ என்பர்.
3. பதம் _________ வகைப்படும்.
4. பகுபதம் ___________ வகைப்படும்.
5. பெயர்ப்பகுபதம் __________ வகைப்படும்.
6. பகுபத உறுப்புகள் _______ வகைப்படும்.
7. பிரிக்கப்படும் உறுப்புகள் __________ உறுப்புகள்.
8. பிரிக்கமுடியாத சொல் __________ பதம்.
9. பகுபதத்தில் முதலில் அமைந்து முதன்மைப் பொருளைத் தருவது __________ ஆகும்.
10. பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை இவற்றில் ஏற்படும் மாற்றம் __________ எனப்படும்.
11. 'எழுதினான்' என்பது __________ பகுபதம்.
12. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு __________
13. பகுதி இடைநிலை இடையே இடம்பெறும் மெய்யெழுத்து ___________ எனப்படும்.
14. 'ஐ' என்பதன் பொருள் __________
15. 'கா' என்பதன் பொருள் ___________

## இயல் - 5

1. செயல் அல்லது வினையின் பெயராக அமைவது _________ எனப்படும்.
2. தொழிற் பெயர் ________ இடத்தில் மட்டும் வரும்.
3. தொழிற்பெயர் ____________ வகைப்படும்.
4. படித்தல் ______________ பெயர்.
5. முதனிலை மாற்றம் பெறாமல் அமைவது __________ தொழிற்பெயர்.

## இயல் - 6

1. அணி என்னும் சொல்லுக்கு ___________ என்பது பொருள்.
2. உவம உருபு வெளிப்படையாக வருவது __________ அணி.

3. உவம உருபு மறைந்து வருவது _________ அணி.
4. உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதை __________ அணி என்பர்.
5. போல, போன்ற, என்பது ________ ஆகும்.
6. மலரன்ன பாதம் இத்தொடரில் 'மலர்' என்பது _______
7. தேன் போன்ற தமிழ் இவற்றில் போன்ற என்பது ________
8. ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் _______ பேரறிவாளன் திரு. இதில் எவ்வகையணி வந்துள்ளது.
9. புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
   வாய்மையாற் காணப்படும். - இதில் அமைந்துள்ளது எவ்வகையணி?
10. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை. - இது எவ்வகையணி?
11. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத்து ஊறும் அறிவு. - எவ்வகையணி?
12. காளை கொம்பு முளைத்த குதிரை போலப் பாய்ந்து வந்தது.
   - எவ்வகையணி

## இயல் - 7

1. முன்னோர்கள் பயன்படுத்திய சொற்களையே பயன்படுத்துவது ___________ என்பர்.
2. வழக்கு ___________ வகைப்படும்.
3. இலக்கண நெறி மாறாமல் அமைந்த சொல் ___________ ஆகும்.
4. 'நிலம்' என்பது __________
5. கால்வாய் என்பது ____________
6. இலக்கண நெறியிலிருந்து சிதைந்து வழங்கும் சொற்கள் ________
7. குடந்தை என்பது ____________
8. தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் கூறுவது ___________
9. தகுதி வழக்கு ____________ வகைப்படும்.
10. 'கால்' கழுவி வந்தாள் ____________ ஆகும்.
11. நாகரிகம் கருதி மறை முகமாகக் குறிப்பிடுவது ___________.

12.மங்களமற்ற சொற்களை மாற்றி மங்கலச் சொற்களால் குறிப்பிடுவது ____________

13.பிறர் அறியாமல் ஒரு குழுவுக்கு மட்டும் புரிவது ________

14.சுடுகாடு - நன்காடு __________

15.பொன்னைப் பறி என்பது _____________

16.முதல், இடை, இறுதி இவற்றில் ஓர் எழுத்திற்குப்பதில் வேறு எழுத்து பொருள் தருவது _________ எனப்படும்.

17.போலி ___________ வகைப்படும்.

18.மயல் - மையல் ___________ போலி.

19.இலஞ்சி - இலைஞ்சி ___________ போலி.

20.முகம் - முகன் __________ போலி.

21.அஞ்சு - ஐந்து __________ போலி.

## இயல் - 8

1. உவமை உவமேயம் இரண்டும் ஒன்றே ___________ அணி.
2. மதிமுகம் - முகமதி ____________ அணி.
3. ஒரு பகுதி உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது _____________ அணி.
4. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
   கருமமே கட்டளைக் கல் - எவ்வகையணி

## இயல் - 9

1. ஒன்றன் பெயர் தன்னைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது _________ எனப்படும்.
2. ஆகுபெயர் ___________ வகைப்படும்.
3. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது ____________.
4. வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது __________.
5. சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது __________ ஆகுபெயர்.
6. காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால் ______________ பெயர்.
7. வெற்றிலை நட்டான், தலைக்கு ஒரு பழம் கொடு ______________ ஆகு பெயர்.

8. வெள்ளை அடிப்போம் ___________ ஆகு பெயர்.
9. வறுவல் தின்றான் _________ ஆகு பெயர்.
10. சித்திரை வந்தாள் __________ ஆகு பெயர்.
11. பிரித்தால் பொருள் தரும் __________
12. பிரித்தால் பொருள் தருவதில்லை __________
13. அடுக்குத் தொடரில் ஒரே சொல் __________ முறை வரை அடுக்கி வரும்.
14. பாம்பு பாம்பு ___________ தொடர்.
15. கலகல __________ கிளவி.
16. வா வா வா _________ தொடர்.
17. வாழ்க வாழ்க வாழ்க ___________
18. அடுக்குத் தொடரில் __________ தனித்தனியே நிற்கும்.
19. இரட்டைக் கிளவியில் சொற்கள் _______ நிற்கும்.
20. விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்களில் __________ தொடர் வரும்.

## இயல் - 1

**I. செய்யுள் வினாக்கள்:**

1. நாமக்கல் கவிஞர் குறிப்பு எழுதுக.
2. தமிழ் மொழியின் சிறப்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
3. எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகள் யாவை?
4. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
5. ‘ஒன்றல்ல இரண்டல்ல’ - பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
6. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாக கவிஞர் கூறுவன யாவை?

**II. உரைநடை வினாக்கள்:**

1. பேச்சு மொழி என்றால் என்ன?
2. வட்டார மொழி என்றால் என்ன?
3. பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் ஐந்தினை எழுதுக.
4. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

## இயல் - 2

**I. செய்யுள் வினாக்கள்:**

1. கவிஞர் வாணிதாசன் குறிப்பு எழுதுக.
2. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுவன யாவை?
3. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
4. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
5. ‘காடு’ பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
6. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**II. உரைநடை வினாக்கள்:**

1. காடு - குறிப்பு எழுதுக.
2. யானைகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளும், மனிதர்களை ஏன் தாக்குகின்றன என்பதையும் விளக்குக?
3. கரடி ‘அனைத்துண்ணி’ என அழைக்கப்படுவது ஏன்?
4. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை தொகுத்து எழுதுக.

III. **துணைப்பாடம்:**

ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

## இயல் - 3

I. **செய்யுள் வினாக்கள்:**

1. கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பு எழுதுக.
2. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துக்களை எழுதுக.
3. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
4. மருதன் இளநாகனார் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு எழுதுக.

II. **உரைநடை வினாக்கள்:**

1. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணம் கூறுக.
2. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்கள்.
3. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக?
4. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?

III. ‘ஆழ்கடலின் அடியில்’ என்னும் துணைபாடக் கதையைச் சுருக்கி எழுதுக.

## இயல் - 4

I. **செய்யுள் வினாக்கள்:**

1. பாரதிதாசன் குறிப்பு எழுதுக.
2. தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
3. ‘இன்பத் தமிழ் கல்வி’ - பாடல் கருத்தினை எழுதுக.
4. குமரகுருபர் - குறிப்பு எழுதுக.
5. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துகள்?

II. உரைநடை வினாக்கள்:

1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு?
2. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
3. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது?
4. கல்வியே அழியாத செல்வம் - விளக்குக?
5. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

III. **துணைப்பாடம்**:

1. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

## இயல் - 5

**I. செய்யுள் வினாக்கள்:**

1. தேனரசன் குறிப்பு எழுதுக.
2. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
3. காளமேகப் புலவர் குறிப்பு எழுதுக.
4. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

**II. உரைநடை வினாக்கள்:**

1. ஓவியங்களின் வகைகள் யாவை?
2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
3. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக?
4. கேலிச் சித்திரம் என்றால் என்ன?
5. ஓலைச் சுவடி ஓவியங்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**III. துணைப்பாடம்:**

சுற்றுலாப் பகுதியில் உள்ள இடங்களை பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

## இயல் - 6

### I. செய்யுள் வினாக்கள்:

1. மூன்றுறை அரையனார் குறிப்பு எழுதுக.
   பழமொழி நானூறு நூல் குறிப்பு எழுதுக.
2. தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.
3. பழமொழி நானூறு என்னும் இப்பாடல் கூறும் கருத்துக்களை எழுதுக.
4. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
5. நெற்கதிரிலிருந்து நெல் மணியை எவ்வாறு பிரிப்பர்?

### II. உரைநடை வினாக்கள்:

1. கொற்கை முத்து பற்றி குறிப்பு எழுதுக.
2. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.
3. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
4. திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.

### III. துணைப்பாடம்:

1. டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## இயல் - 7

### I. செய்யுள் வினாக்கள்:

1. காவற்பெண்டு - ஆசிரியர் குறிப்பு எழுதுக.
2. தன் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. தோன்றமல்லன் கப்பம் கேட்டவுடன் தேசிங்குராசன் செய்தவை யாவை?
4. தேசிங்குராசனைப் பற்றி ஷேக் முகமது கூறியன யாவை?
5. தேசிங்குராசனின் பேச்சைக் கேட்ட தோன்றமல்லன் செய்தவை யாவை?

## II. உரைநடை வினாக்கள்:

1. முத்துராமலிங்கரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்படக் காரணம் யாது?
2. முத்துராமலிங்கரின் பேச்சை பற்றிய ராஜாஜியின் கருத்து யாது?
3. முத்துராமலிங்கரின் முதல் சொற்பொழிவு பற்றிய செய்திகளை எழுதுக.
4. பர்மாவில் முத்துராமலிங்கர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## III. துணைப்பாடம்

வ உ சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

# இயல் - 8

## I. செய்யுள் வினாக்கள்:

1. பொய்கையாழ்வார் அகல் விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றார்?
2. பூதத்தாழ்வார் ஞான விளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
3. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் குறிப்பு எழுதுக.
4. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

## II. உரைநடை வினாக்கள்:

1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் யாது?
2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக் குடி அடிகளார் கூறுவது யாது?
3. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?
4. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக் காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

## III. துணைப்பாடம்:

“உண்மை ஒளி” படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

## இயல் - 9

**I. செய்யுள் வினாக்கள்:**

1. வாழ்க்கை மலர்ச் சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?
2. சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?
3. எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?
4. கவிஞர் கண்ணதாசன் குறிப்பு எழுதுக.
5. குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்ச்சியை எழுதுக.

**II. உரைநடைவினாக்கள்:**

1. விடுதலை போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.
2. காயிதே மில்லத் அவர்கள் தன குடும்பத்திலும் எளிமையைக் கடைப் பிடித்தார் என்பதற்குச் சான்று எழுதுக.
3. ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்கி எழுதுக.

**III. துணைப்பாடம்:**

‘பயணம்’ கதையைச் சுருக்கி எழுதுக.